முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

முன்னிலை: **திருமதி K.அறிவொளி,** M.A., M.L.,

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07-ம் நாள் செவ்வாய்கிழமை

**விவாகரத்து கோரிக்கை மனு எண்.30/2025**

*(CNR No.TNSV01000953/2025 )*

* * * * *

மோனிகாபிளாரன்ஸ் . . . மனுதாரர்

/எதிர்/

சந்தியாகு என்ற தாஸ் . . . எதிர்மனுதாரர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 26.03.2026-ம் தேதி என் முன்னர் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.நவநீதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்கு 03.12.2025-ம் தேதியன்று அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும், மேற்படி எதிர்மனுதாரர் ஆஜராக போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும், 09.02.2026 அன்று எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாத காரணத்தினாலும் தோன்றா தரப்பினராக்கி ஒருதலைபட்சமாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரையை கேட்டும், மனுதாரர் தரப்பில் முன்னிடப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உ த் த ர வு**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 13.06.2019-ம் தேதியன்று கிறிஸ்துவ முறைப்படி பட்டுக்கோட்டை, மாதாகோவில் ரோடு, உலக இரட்சகர் தேவாலயத்தில் (HOLY REDEEMERS CHURCH) நடைபெற்ற

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.07 17:48:46 +0530

திருமணத்தை ரத்து செய்யக் கோரியும், வழக்கின் செலவு தொகை கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் மனுதாரரால் மணமுறிவுச் சட்டம் பிரிவு 10(1)(vii)-ன் கீழ் இம்மனு செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தரப்பு வழக்குரையின் சுருக்கம்:-**

*i)* மனுதாரரும், எதிர்மனுதாரரும் கிறிஸ்துவ மதத்தை சேர்ந்தவர்கள் என்றும், அதன் அடிப்படையில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 13.06.2019-ம் தேதியன்று ஜாதி வழக்கப்படியும், குல வழக்கப்படியும், உற்றார் உறவினர்கள் மற்றும் பெரியோர்கள் முன்னிலையில் பட்டுக்கோட்டை, மாதாகோவில் ரோடு, உலக இரட்சகர் தேவாலயத்தில் (HOLY REDEEMERS CHURCH) வைத்து கிறிஸ்துவ மத முறைப்படியும், கிறிஸ்துவ மத போதகர்களால் மனுதாரர், எதிர்மனுதாரர் இருவீட்டார்கள் சம்மதத்தின் பேரிலும், எதிர்மனுதாரரின் முழு சம்மதத்தின் பேரிலும், வெகு விமர்சையாக திருமணம் நடைபெற்றது என்றும், அதன் பிறகு வரவேற்பு நிகழ்ச்சி பட்டுக்கோட்டையில் உள்ள அழகர் திருமண மண்டபத்தில் வைத்து வெகு விமர்சையாக நடைபெற்றது என்றும், மேற்படி திருமணத்திற்கு மனுதாரருக்கு மனுதாரரின் பெற்றோர்கள் 25 பவுன் தங்க நகைகளும், மனுதாரரின் பெற்றோர்கள் எதிர்மனுதாரருக்கு 5 பவுன் தங்க நகைகளும் ஆக மொத்தம் 30 பவுன் தங்க நகைகளும், பண்டபாத்திரங்கள் மற்றும் சீர்வரிசை சாமான்கள் சுமார் ரூ.1,40,000/-த்திற்கு வழங்கினார்கள் என்றும், அதன்பிறகு மனுதாரரும், எதிர்மனுதாரரும் சந்தோஷமாக முதலில் எதிர்மனுதாரரின் வீட்டில் வாழ்ந்து வந்தார்கள் என்றும், அதன்பிறகு மனுதாரரின் சொந்த ஊரில் வாழ்ந்து வந்தார்கள் என்றும், மேலும் மனுதாரருக்கு திருமணத்தின் போது

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.07 17:49:03 +0530

மனுதாரரின் பெற்றோர்களால் வழங்கப்பட்ட 30 பவுன் தங்க நகைகளும், பண்டபாத்திரங்கள் மற்றும் சீர்வரிசை சாமான்களும் மனுதாரர் வசம் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

*ii)* மேலும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணமான சில மாதங்களிலேயே எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கருத்தரிக்கவில்லை என்றும், மனுதாரருக்கு நீரழிவு நோய் (Sugar) இருப்பதால் எப்போதும் குழந்தைகள் பிறக்காது என்றும், எதிர்மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாரரை மனரீதியாக கொடுமை செய்து வந்தார்கள் என்றும், அதன் பிறகு எதிர்மனுதாரர் மனுதாரரை விட்டு விலகி செல்ல ஆரம்பித்து விட்டார் என்றும், மனுதாரரும் எதிர்மனுதாரரை தான் என்ன தவறு செய்தேன் என்றும், ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிர்மனுதாரர் மனுதாரரை பார்த்து உன்னுடன் தனக்கு வாழ புடிக்கவில்லை நீ எங்காவது போய் விடு என்று தொடர்ந்து கூறி கொண்டு மனுதாரரை கடந்த 25.12.2022-ம் ஆண்டு மனுதாரரின் பெற்றோர்கள் வீட்டிற்கு அனுப்பி விட்டார் என்றும், அதன் பிறகு மனுதாரர் மற்றும் மனுதாரரின் பெற்றோர்கள் ஊரில் உள்ள பெரியோர்களை வைத்து பேசி பார்த்ததற்கும் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று கூறிவிட்டார் என்றும், அதன் பிறகும் மனுதாரர் தன்னை எதிர்மனுதாரர் எப்படியாவது வந்து அழைத்து செல்வார் என்ற கனவில் இருந்து வந்தார் என்றும், ஆனால் எதிர்மனுதாரர் மனுதாரரை அழைத்து செல்ல வரவில்லை என்றும், அதன்பிறகும் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்காக பல வழிகளில் முயற்சிகள் செய்தும் பலனளிக்கவில்லை என்றும், மேலும் மனுதாரரும் எதிர்மனுதாரரை விட்டு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.07 17:49:13 +0530

கடந்த 2 ஆண்டுகளுக்கு மேல் தனது பெற்றோர்கள் வீட்டில் பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றும், மேற்படி திருமணத்தின் பயனாக மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை என்றும், மேலும் எதிர்மனுதாரரால் மனுதாரரின் திருமண வாழ்க்கை தவிடு பொடியாகி விட்டது என்றும், மேலும் எதிர்மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் பெற்றோர்களின் செய்கையினால் மனுதாரர் சொல்லவொண்ணா துன்பத்திற்கும், துயரத்திற்கும் மிகுந்த மன உளைச்சலுக்கும், மன வேதனைக்கும் ஆளாகி நடை பிணமாக வாழ்ந்து வருகிறார்.

*iii)* எனவே மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு பல வழிகளில் முயற்சி செய்தும் பலனளிக்காமல் போனதால் இனி மேலும் மனுதாரர் எதிர்மனுதாரரோடு வாழ்வதற்கு வாய்ப்பே இல்லாத காரணத்தாலும் எதிர்மனுதாரரிடமிருந்து விவாகரத்து கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்படுகிறது.

**3)** எதிர்மனுதாரருக்கு 03.12.2025-ம் தேதியன்று அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும், மேற்படி எதிர்மனுதாரர் ஆஜராக போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும், மேற்படி எதிர்மனுதாரரை 09.02.2026 அன்று அழைத்தும் ஆஜராகாத காரணத்தினாலும் தோன்றா தரப்பினராக்கி அவர் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

**4)** கடந்த 12.03.2026-ம் தேதியன்று மனுவின் மீதான விசாரணையின் போது, மனுதாரர் மோனிகாபிளாரன்ஸ் ம.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.07 17:49:34 +0530

சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் ஏற்கனவே தோன்றாத்தரப்பினராக அறிவிக்கப்பட்டிருந்ததால் ம.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**5)** மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரரின் மனுவினை நிரூபிக்கும் வகையில் மனுதாரர் தரப்பில் முன்னிடப்பட்ட ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. கடந்த 13.06.2019-ம் தேதியிட்ட மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றதற்கான திருமணப் பத்திரிக்கை அசல் ம.சா.ஆ.1 ஆகவும், 13.06.2019-ம் தேதியிட்ட மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் நகல் ம.சா.ஆ.2 ஆகவும், 13.06.2019-ம் தேதியிட்ட மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பட்டுக்கோட்டை மாதா கோவில் ரோடு, உலக இரட்சகர் தேவாலயத்தில் (HOLY REDEEMERS CHURCH) நடைபெற்ற திருமணத்தின் திருமணப் பதிவுச் சான்றிதழ் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3 ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.4 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. மேலும், மனுதாரர் தனது நிரூபண வாக்குமூலத்தில் மனுவில் கண்டுள்ள சங்கதிகளை ஒத்தே சாட்சியம் அளித்துள்ளார்.

**6)** மனுதாரர் கோரியவாறு விவாகரத்து சட்டம், 1869 பிரிவு 10(1)(vii)-ன்கீழ் ஒரு நபர் விவாகரத்து பெற வேண்டுமென்றால் எதிர்மனுதாரர் வேண்டுமென்றே திருமணத்தின் பயனான தாம்பத்திய உறவை தவிர்த்திருக்க வேண்டும். பிரிவு 10(1)(ix)-ன்கீழ் மனுக் கொடுப்பதற்கு உடன் முன்னால் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு மனுதாரரை கைவிட்டுச்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.07 17:49:41 +0530

07.04.2026 முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை

சென்றிருக்கவேண்டும்.

**7)** மனுதாரர் தரப்பு மனு, சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களான ம.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், ம.சா.ஆ.4 மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையானது மனுதாரரின் பெயர், முகவரி ஆகியவற்றின் உண்மை தன்மை அறியும் பொருட்டு இந்நீதிமன்றம் ஒப்பிட்டு பார்க்க ஏதுவாக முன்னிடப்பட்டது. மேலும், ம.சா.ஆ.1 திருமண அழைப்பிதழை பரிசீலனை செய்கையில், மனுதரப்பினர்களுக்கிடையே கடந்த 13.06.2019-ம் தேதியன்று உற்றார், உறவினர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றுள்ளது என்பதை அறிய முடிகிறது. அதிலும் குறிப்பாக ம.சா.ஆ.3 மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பட்டுக்கோட்டை மாதா கோவில் ரோடு, உலக இரட்சகர் தேவாலயத்தில் (HOLY REDEEMERS CHURCH) வைத்து கிறிஸ்துவ மத முறைப்படியும், கிறிஸ்துவ மத போதகர்களால் மனுதாரர், எதிர்மனுதாரர் இருவீட்டார்கள் சம்மதத்தின் பேரிலும், எதிர்மனுதாரரின் முழு சம்மதத்தின் பேரில் திருமணம் நடைபெற்றிருப்பது தெளிவாக தெரிய வருகிறது. மேற்படி திருமணத்தின் போது மனுதரப்பினர்கள் இருவரும் தம்பதியராய் இணைந்து ம.சா.ஆ.2 புகைப்படம் எடுத்துக் கொண்டதையும் இந்நீதிமன்றம் கவனிக்கத் தவறவில்லை.

**8)** எனவே, மேற்கண்ட வகையில் விவரித்தவாறு மனுதாரர், எதிர்மனுதாரரை விட்டு கடந்த 25.12.2022-ல் இருந்து மனு தாக்கல் செய்யும் வரை அதாவது மூன்று வருடத்திற்கும் மேலாக பிரிந்து அவரது பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறார் என்பது தெளிவாக தெரிய வருகிறது. அதனை ஆட்சேபித்து

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.07 17:49:49 +0530

எதிர்மனுதாரர்/கணவர் இந்நீதிமன்றத்தின் முன்பாக கட்சி செய்யவில்லை. குறிப்பாக மனுதாரர்/மனைவி தேவகோட்டை தாலுகாவை சேர்ந்தவர் என்றும், எதிர்மனுதாரர்/கணவர் தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்தவர் என்ற போதிலும், அவர்களது திருமணம் பட்டுக்கோட்டை, மாதாகோவில் ரோடு, உலக இரட்சகர் தேவாலயத்தில் நடைபெற்றிருந்தபோதும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் முதலில் எதிர்மனுதாரரின் வீட்டில் வாழ்ந்து வந்ததாகவும், பின்னர் மனுதாரரின் சொந்த ஊரில் வாழ்ந்து வந்ததாகவும் அதன் பின்னர் மனுதாரரை, எதிர்மனுதாரருக்கு பிடிக்காமல் அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி விட்டதாகவும் மனுவில் கண்ட சங்கதிகள் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக உள்ளது. மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரருக்கு எதிராக தங்களுக்கு இடையிலான திருமணத்தை ரத்து செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது குறித்த அறிவிப்பு உரிய வகையில் எதிர்மனுதாரருக்கு 03.12.2025-ம் தேதியன்று அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும், மேற்படி எதிர்மனுதாரர் ஆஜராக போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும், 09.02.2026 அன்று எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாத காரணத்தினாலும் தோன்றாதரப்பினராக அறிவிக்கப்பட்டு, 12.03.2026-ம் தேதியன்று மனுதாரர் தன்னை ம.சா.1-ஆக விசாரித்துக் கொண்டு ம.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்களை குறியீடு செய்தபோதும், எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை ஆட்சேபித்து தான் தன் மனைவியை விட்டு பிரிந்து வாழ்வதற்கான தகுந்த, நியாயமான காரணங்கள் ஏதும் இருப்பதாகவோ, தாங்கள் இருவரும் கணவன்-மனைவியாக நெருங்கிய உறவு கொண்டார்கள் என்பதாகவோ, தன் மனைவி சொல்வதுபோல தான் எவ்வகையிலும் தன்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.07 17:49:58 +0530

மனைவியை துன்புறுத்தவில்லை என்பதாகவோ தன் தரப்பு நியாயத்தை முன்னிறுத்தி இம்மனுவை ஆட்சேபிக்க முன்வரவில்லை. மேலும், விவாகரத்து மனுவை ஆட்சேபித்து தான் தன் மனைவியுடன் சேர்ந்து வாழ விரும்புவதாகவும் சொல்ல முன்வரவில்லை.

**9)** எனவே, மனுதாரர் மனு மற்றும் சாட்சியங்களில் கூறியிருப்பதுபோல், திருமணத்தின் பயனாக மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை என்றும், மனுதாரர், எதிர்மனுதாரரை விட்டு கடந்த 3 வருடங்களுக்கும் மேலாக பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்பதும், குறிப்பாக மனுதாரரின் மனதில் எதிர்மனுதாரருடன் வாழ்வது தீங்கு விளைவிக்கும் என்ற நியாயமான அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் மனுதாரரை கொடுமைப்படுத்தியிருக்கிறார் என்பதும் மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனுதாரர் கோரியவாறு விவாகரத்துச் சட்டம் பிரிவுகள் 10(1)*(ix)*-ன்கீழ் மனுதரப்பினர்களுக்கிடையே கடந்த 13.06.2019-ம் தேதியன்று நடந்த திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்குவது மனு பொருண்மைகளின்படி சரியாக இருக்கும் என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 13.06.2019-ம் தேதியன்று பட்டுக்கோட்டை, மாதாகோவில் ரோடு, உலக இரட்சகர் தேவாலயத்தில் (HOLY REDEEMERS CHURCH) வைத்து நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து மனுதாரருக்கு விவாகரத்து பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.07 17:50:12 +0530

07.04.2026

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.07 17:50:24 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி:-</u>**

ம.சா.1-மோனிகாபிளாரன்ஸ்

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 13.06.2019 | மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றதற்கான திருமணப் பத்திரிக்கை அசல். |
| ம.சா.ஆ.2 | 13.06.2019 | மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் நகல். |
| ம.சா.ஆ.3 | 13.06.2019 | மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பட்டுக்கோட்டை மாதா கோவில் ரோடு, உலக இரட்சகர் தேவாலயத்தில் (HOLY REDEEMERS CHURCH) நடைபெற்ற திருமணத்தின் திருமணப் பதிவுச் சான்றிதழ் சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.4 | --- | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல். |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:</u>** இல்லை

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.07 17:50:33 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,

சிவகங்கை.

விவாகரத்து கோரிக்கை

மனு எண். **30/2025**

சீரான / வரைவு ___ உத்தரவு

நாள்: 07.04.2026

07.04.2026 முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை